# INTERNATIONAL INDIAN SCHOOL DAMMAM

## QUSTION BANK FOR MID TERM EXAM 2023-24

### FROM PREVIOUS YEAR BOARD PAPERS

**CLASS: IX** **SUBJECT: TAMIL [தமிழ்]**

### இயல் (1-3)

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.**

'உயிர் வாழ்வது என்பது உண்பதற்கன்று. உண்பது உலகம் வாழ தொண்டாற்றுவதற்கே' என்னும் உண்மையை உணர்ந்து 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்னும் ஒல்காப்புகழ் தொல்காப்பியர் தம் இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைகின்றார். 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்று குறுந்தொகை கூறுகிறது இதனைத் தம் வாழ்வில் குறிக்கோளாக கொண்டவர்கள் வினை முடித்து அதனால் இன்பம் வருமென்றால் தம் விதி முடிந்து போனாலும் வேண்டிப் பெற்றுக் கொண்டனர். தம் உழைப்பால் தொல்லுலகை நல்லுலகம் ஆக்கியவர்கள் உழைப்பாளர்கள். வாழ்க்கை என்னும் தேரினை ஓட்ட அறம்,பொருள் என்னும் இரு சக்கரங்களைப் பூட்டி, உழைப்பென்னும் உலகத் தெருக்களில் இன்று உலா வருகின்றனர்.

**வினாக்கள்**

1. உயிர் வாழ்வது எதற்காக ?
   அ) உண்பதற்காக ஆ) உடுப்பதற்காக
   இ) சிரிப்பதற்காக ஈ) தொண்டாற்றுவதற்காக
2. உலகமென்பது யாருக்காக?
   அ) உயர்ந்தோர்க்காக ஆ) செல்வர்க்காக
   இ) பெண்களுக்காக ஈ) ஏழைக்காக
3. தொல்காப்பியர் இயற்றியது எவ்வகை நூல்?
   அ) சரித்திர நூல் ஆ) இலக்கண நூல்
   இ) நாடக நூல் ஈ) குழந்தைகள் நூல்
4. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்று கூறும் நூல் எது ?
   அ) நற்றினை ஆ) புறநானூறு
   இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை
5. வாழ்க்கை என்னும் தேரினை ஓட்ட உதவும் சக்கரங்கள் யாவை?
   அ) அகம், புறம் ஆ) அறம், பொருள்
   இ) இன்பம், துன்பம் ஈ) இன்பம், வீடு

**II. சான்று தருக**

1. பெயர்ப்பயனிலை

2. தோன்றா எழுவாய்
3. தன்வினை
4. பிறவினை
5. வினையடை
6. தனி வினை
7. கூட்டுவினை
8. முதல்வினை
9. துணை வினை
10. செய்வினை
11. இரு பெயரொட்டுப் பண்பு தொகை
12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
13. உருவகம்
14. பெயர்ப் பயனிலைத் தொடர்
15. எதிர்மறை வினைத்தொடர்

## III. இலக்கணக் குறிப்பு தருக.

1. உண்டாய்
2. படித்தவள் மாலா
3. கவிதா உரை படித்தாள்
4. மற்றொன்று
5. கண்டுபிடித்தார்கள்
6. அரசே வருக
7. ஓடிய குதிரை
8. சித்திரைத் திங்கள்
9. புற்களின் மீது நடக்காதீர்கள்.
10. கண்டேன் சீதையை
11. அவன் திருத்தினான்
12. இது நாற்காலி
13. பத்துப்பாட்டு
14. சித்திரைத் திங்கள்
15. கூவாக் குயில்

## IV. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச் சொல்லையே ___________ என்கிறோம்.
2. ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தை _________ என்கிறோம் .
3. எழுவாய் ஒரு வினை செய்ய அதற்கு அடிப்படையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள் _______________ஆகும் .
4. எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது _________ எனப்படும்.
5. எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது ___________ எனப்படும்.
6. செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை __________ ஆகும்.

7. செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை _________ ஆகும்.
8. பகுபத உறுப்புகள் ________ வகைப்படும்.
9. கிறு, கின்று, ஆநின்று என்பது___________ ஆகும்.
10. சாரியை இடத்தில் ' த் ' வந்தால் அது __________ ஆகும்.
11. வினைச்சொற்கள் அமைப்பின் அடிப்படையில் __________,________ என இரு வகைப்படுத்தலாம் .
12. தனி வினை அடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் _________ எனப்படும்.
13. கூட்டு வினை அடிகளைக் கொண்ட வினைச் சொற்கள் __________ எனப்படும்.
14. கூட்டு வினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படை பொருளைத் தரும் வினை _______________ ஆகும்.
15. முதல் வினைக்கு துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை __________ ஆகும் .
16. தமிழில் ஏறத்தாழ ________ துணைவினைகள் உள்ளன.

## <u>V. கூறியவாறு செய்க.</u>

1. கம்பர் இராமாயணத்தைப் பாடினார். (செயப்பாட்டுவினையாக்குக.)

2. பதவியை விட்டு நீங்கினான். (பிறவினையாக்குக.)

3. படித்தவள் பார்கவி (வினைப் பயனிலை ஆக்குக.)

4. விளையாடுபவள் சீதா (வினாப்பயனிலை ஆக்குக.)

5. காண் (பிறவினையாக்குக.)

6. குயில் பாடியது (பெயரெச்சமாக மாற்றுக.)

7. தள்ளு ( துணைவினையை பயன்படுத்தி புதிய தொடர் உருவாக்குக)

6. வா ( வினை அடியை பயன்படுத்தி புதிய தொடர் உருவாக்குக)

7. வை (வினை அடியை துணைவினை தொடராக்குக)

8. கதவு திற (வல்லினம் மிகும் இரண்டாம் வேற்றுமை தொடராக்குக)

9. குயில் கூவும் (வல்லினம் மிகும் ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் ஆக்குக)

10. பாம்பு (இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆக்குக)

11.வருவதாக கூறு .(சொல் உருபினை எடுத்து எழுதுக.)

## <u>VI செய்யுள் வரிகளைப் படித்து கேட்கப்பட்டுள்ள கேள்விக்கு சரியான விடை எழுதவும்.</u>

**தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்**
**பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்**
**பாவை விளக்கும் பலவுடன் பரப்பு மின்**

**காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்**
**பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்.**

**<u>வினாக்கள்</u>**

1. 'கமுகு' என்பதன் என்ற சொல்லின் பொருள்யாது?
   அ) கொடி ஆ) வாழை
   இ) பாக்கு ஈ) கரும்பு
2. பசும்பொன் தூண்களில் எதனைத் தொங்க விடுமாறு கூறுகின்றனர்?
   அ) கொடிகள் ஆ) முத்து மாலைகள்
   இ) தங்க மாலைகள் ஈ) பூ மாலைகள்
3. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
   அ) தமிழோவியம் ஆ) தமிழ்விடு தூது
   இ) மணிமேகலை ஈ) பெரிய புராணம்
4. இந்நூலில் ஆசிரியர் யார்?
   அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள்
   இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) சேக்கிழார்

## VII . <u>பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக.</u>

1. **ஓஒதல் வேண்டும் —-------------- செய்வினை**
   **ஆஅதும் என்னு மவர்**.
   அ) ஒளிமூழ்கும் ஆ) ஒளிமாழ்கும்
   இ) முயற்சி ஈ) எண்ணம்
2. **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் —-----------**
   **தகுதியான் வென்று விடல்**.
   அ) அவர்தம் ஆ) தான்தம்
   இ) தாம்தம் ஈ) தான்தன்

## <u>VIII. விடை தருக (செய்யுள்)</u>

1. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக?
2. இரண்டிரண்டு பூக்களை வைத்து எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
3. வனப்பு எத்தனை வகைப்படும் அவை யாவை ?
4. மூவகை பாவினங்கள் யாவை ?
5. தமிழில் உள்ள வண்ணங்கள் எத்தனை தமிழ் சுவைகள் எத்தனை?
6. பட்டமரம் செய்யுளில் ஆசிரியர் பெயர் என்ன?
7. பட்ட மரத்தின் வருத்தங்களாகக் கவிஞர் குறிப்பிடுவன யாவை?
8. சோழநாட்டில் காவிரி வளங்கள் யாவை?
9. சோழ நாட்டில் மரங்களும் மலர்களும் எவ்வாறு அமைந்துள்ளன என்று பெரியபுராணம் கூறுகிறது ?
10. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே நிலைத்த புகழை பெறுவதற்கு குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
11. ஐம்பெரும் காப்பியங்கள் யாவை?
12. பழ மணல் மாற்றுமின் புது மணல் பரப்புமின்.விளக்குக -

13.  இந்திரவிழா எங்கு நடைபெற்றது ?
14.  இந்திரன் விழா இந்திர விழாவை காண புகார் நகரில் குடியிருந்தவர்கள் பற்றி எழுதுக?

## VI. விடை தருக (உரைநடை)

1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை ?
2. தமிழ் என்ற சொல்லிலிருந்து திராவிடம் என்ற சொல் பிறந்தது என்று கூறியவர் யார்?
3. தென்திராவிட மொழிகள் யாவை?
4. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
5. தமிழின் தனித் தன்மைகள் யாவை ?
6. சோழர் கால குமிழித்தூம்பு எதற்காக பயன்பட்டது ?
7. கூவல், இலஞ்சி, கேணி ,ஊருணி என்று அழைக்கப்படுபவை எவை?
8. கல்லணை பற்றி குறிப்பு எழுதுக.
9. ஜான் பென்னிகுயிக் குறிப்பு வரைக.
10.  ஏறுதழுவுதல் குறித்து எழுதுக.
11.  ஜல்லிக்கட்டு குறிப்பு வரைக.
12.  ஏறுதழுவுதல் பேணி காப்பது நம் கடமையாகும் ஏன்?

## VII. துணைப்பாடத் தலைப்புகள்

1. வளரும் செல்வம்
2. தண்ணீர்
3. அகழாய்வுகள்

## VIII. கடிதம் எழுதுக.

1. உன் நண்பனுக்கு பாராட்டு கடிதம் எழுதுக.

2. நீ புதிதாய் சேர்ந்துள்ள பள்ளியின் நடப்புகளைப் பற்றி உன்  தோழன்/ தோழிக்கு கடிதம் எழுதுக.

3. உனது அண்ணன் அனுப்பிய பிறந்த நாள் பரிசுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

4. தேவையற்ற இரைச்சலைக்  குறைக்கக்  கோரி மாசுக்கட்டுப்பாட்டு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

5. உனக்குத் தேவையான புத்தகங்களை அனுப்பித்  தருமாறு வணிகக்  கடிதம் எழுதுக.

6. உனது பகுதியில் மின்சாரம் தடை படுவதைத்  தடுக்கக் கோரி கடிதம் எழுதுக.

## IX. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுதல்.

1. முன்னுரை– முயற்சியின் சிறப்பு– முயற்சி திருவினையாக்கும்-- முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்– சிலந்தி முயற்சி கண்டு– முயற்சியால் முன் வந்தவர்கள் பலர்-- முயற்சி உடையார் வறுமை அடைவதில்லை- முடிவுரை


2. முன்னுரை-– பொதுநலத் தொண்டு–சுயநலம்கூடாது– விசாலப் பார்வை– மாணாக்கர் பருவம்– சாரணர் படை- நாட்டுநலப்பணி குழு– விழிப்புணர்வு முகாம்– முடிவுரை

3. முன்னுரை– அறிவியலும் வாழ்க்கையும்– மனித வாழ்க்கைக்கு– நன்மை தீமை– அன்றைய எண்ணங்கள் இன்றைய வளர்ச்சி-மருத்துவத் துறையில் அறிவியலின் வளர்ச்சி– முடிவுரை

4. முன்னுரை– மொழி–- தாய்மொழியின் தனித்துவம்– எளிதில் புரிதல் — தமிழின் இளமைத் தன்மை– தமிழின் சிறப்புகள்— தமிழ்ச் செம்மொழி— முடிவுரை

## <u>X. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக</u>.





*****************************